**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 53/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W-6 |
| Name | : | கார்த்திக், வயது 29 |
| Father Name/Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | ராமலிங்கபுரம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | வெளிநாட்டில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of January 2024.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது வெளிநாட்டில் வேலை செய்கிறேன். தற்போது விடுமுறைக்காக எனது சொந்த ஊரான ராமலிங்கபுரத்திற்கு வந்துள்ளேன். அ.சா.1 எனது அம்மா. வழக்கில் இறந்த நபர் எனது அப்பா. கடந்த 21.08.2022 ஆம் தேதி அன்று இரவு 07.15 மணியளவில் எனது அப்பா ஜமீன்தேவர்குளத்திற்கு வேலை விஷமாக அவரது TN 21 K 8481 என்ற இருச்சக்கர வாகனத்தில் சென்று திரும்பி வந்து கொண்டிருந்த போது ஜமீன்தேவர்குளத்தில் இருந்து வானரமுட்டி போகும் ரோட்டில் தோனுகால் விலக்கை தாண்டி 100-150 மீட்டர் தொலைவில் எதிரே வந்த போலிரோ நான்கு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனது தம்பி அர்ஜீன் மற்றும் மாமா குமாரசாமி ஆகியோர் எனது அம்மாவிற்கு தகவல் சொன்னார்கள். எனது தம்பியும் மாமாவும் என் அப்பாவிற்கு பின்னால் வந்து கொண்டிருந்தார்கள்.
2. விபத்தில் எனது அப்பாவிற்கு தலையில்காயம் ஏற்பட்டது. பின்னர் எனது அம்மா, மாமா மாரிக்குமார் சம்பவ இடம் வந்து எனது அப்பாவை பார்த்து 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு எனக்கு தகவல்சொன்னார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது அப்பா வரும் வழியில் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார். விபத்து சம்பந்தமாக நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. உங்களுக்கு எத்தனை மணிக்கு யார் மூலம் தகவல் கிடைத்து என்றால் நேரம் எனக்கு சரியாக நினைவில் இல்லை. என் தம்பி அர்ஜீன் தகவல் சொன்னார். நேரில் வந்து தகவல் சொன்னாரா என்றால் ஆம். நேரில்தகவல் சொல்லும் போது மணி என்ன என்றால் தெரியாது.
2. நீங்கள் எத்தனை மணிக்கு எங்கு போனீர்கள் என்றால் 08.10 மணியளவில் அரசு மருத்துவமனைக்கு போனேன். உங்களுடன் யாரும் வந்தார்களா அல்லது தனியாக போனீர்களா என்றால் ஆள் வந்தார்கள். நீங்கள் மருத்துவமனைக்கு போகும் போது உங்கள் அப்பாவின் உடல் அங்கு வந்துவிட்டது என்றால் சரிதான்.
3. உங்கள் அப்பாவைக் கொண்டு வரும் போது உங்கள் அம்மாவும் உடன் வந்தார் என்றால் ஆம். நீங்கள் படித்துள்ளீர்களா என்றால் படித்துள்ளேன். என்ன படித்துள்ளீர்கள் என்றால் IT படித்து வெளிநாட்டில் வேலை செய்கிறேன். தற்போது வெளிநாட்டில் வேலை செய்கிறீர்களா அல்லது சம்பவ சமயம் வேலை செய்தீர்களா என்றால் அப்போதும் வெளிநாட்டில் வேலை செய்தேன் சம்பவ சமயம் விடுமுறைக்கு வந்திருந்தேன்.
4. அரசு மருத்துவமனைக்கு போலிசார் வந்து வந்தார்களா விசாரணை செய்தார்களா என்றால் ஆம். உங்களிடமும் மற்றவர்களிடமும் போலிசார் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆம். அதன் பிறகு உங்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் ஆம். என்றைக்கு என்றால் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் தேதி நினைவில் இல்லை.
5. உங்கள் அப்பா இறந்த விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விபட்டது தான் என்றாலும் சரிதான். நீங்கள் வெளிநாட்டில் இருந்து விடுமுறையில் எத்தனை நாட்கள் இருந்தீர்கள் என்றால் 7 மாதம். உங்கள் அண்ணனின் திருமணத்தின்போது உங்கள் அப்பாவிற்கும், உங்கள் அண்ணனிற்கும் பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை.
6. உங்கள் குடும்பத்திற்கும் உங்கள் அப்பாவிற்கும் உங்கள் மகன் திருமணத்தின் சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் உங்கள் அண்ணன் திருமணத்திற்கு உங்கள் அப்பா வரவில்லை என்றால் எனது அப்பா திருமணத்திற்கு முன்னரே இறந்துவிட்டார். திருமண பேச்சுவார்த்தைக்கு பிறகு உங்கள் அப்பா உங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் அந்த பிரச்சனையின் காரணமாக உங்கள் அப்பாவிற்கு மது பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.
7. மது பழக்கத்தின் காரணமாக மது போதையில் இருந்த போது விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. உங்கள் அப்பாவிற்கு பின்னால் வந்த உங்கள் தம்பி மற்றும் மாமா ஆகியோர் போகவில்லை

என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பிறகு காவல்நிலையத்திற்கு போனீர்களா என்றால் இல்லை. உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் உங்கள் குடும்பத்தில் இருந்து உங்களை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

8. உங்கள் அப்பா என்ன தொழில் செய்தார் என்றால் கொத்தனார். சம்பவத்தின் போது வீட்டில் இருந்தீர்களா தோட்டத்தில் இருந்தீர்களா என்றால் தோட்டத்தில் இருந்தேன். யாருடைய தோட்டம் என்றால் சித்தப்பாவின் தோட்டம். அங்கிருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் என்றால் 2, 3 கி.மீ இருக்கும். உங்கள் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்ட பிறகு 3 கிமீ தொலைவில் உள்ள சம்பவ இடத்திற்கு செல்லாமல் மருத்துவமனைக்கு செல்ல என்ன காரணம் என்றால் மருத்துவமனைக்கு கொண்டு போய்விட்டதாக தகவல் சொன்னார்கள். நீங்கள் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.